FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

(BNSS பிரிவு 173 இன் கீழ்)

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120358

1. District : TRICHY மாவட்டம் | PS: Trichy Town காவல்நிலையம் | Year: 2025 ஆண்டு | FIR No.: 81/2025 மு.த.அ. எண் | Date: 11.07.2025 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) | Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 10.07.2025 | Date to : நாள் வரை

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 11 15 | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.07.2025 | Time : நேரம் 0700 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD | Time : நேரம் 11.07.2025

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Complaint Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Thuraiyur Taluk office குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 50 KM South West

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. Thiruvengadam | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Periyannan

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 14.05.73 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Private Company Employee | (g) Address : முகவரி 2/19, Ambalakara Street, Periyasamipalayam, Thuraiyur Taluk, Trichy (Dist.)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

To. Raja Land Surveyor, Thuraiyur (TK)
Trichy District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் No Delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பின விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

10.07.2025.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

10.07.2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(G. SAKTHIVEL)
Inspector of Police
Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

15. Date & Time of despatch to the court: 11.07.2025 1030
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, திருச்சி மாவட்டம் அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.8/2025-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 11.07.2025 பணியில் இருந்த போது காலை 07.00 மணியளவில் திருச்சி மாவட்டம், துறையூர் தாலுகா, பொன்னுசங்கம்பட்டி, அம்பலகாரத்தெரு, கதவு எண்.2/19 என்ற முகவரியில் வசித்து வரும் பெரியபூவான் மகன் திரு.P.முருகேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அனுமதி பெற்று அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை ரகசியமாக செய்து, புகார்மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், துறையூர் தாலுகா, பொன்னுசங்கம்பட்டி கிராமத்திற்குரிய சர்வேயர் திரு.ராஜா மற்றும் புகார்தாரர் திரு.P.முருகேசன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்து எதிரியின் கெட்ட நடத்தையை உறுதி செய்துகொண்டு, பின்னர் இன்று 11.07.2025 காலை 08.45 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.8/2025 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம்-1988 (as amended in 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. திருச்சி 11.07.2025 அனுப்புனர் P.முருகேசன், வயது 53/2025, த/பெ பெரியபூவான், எண்.2/19, அம்பலகாரத்தெரு, பொன்னுசங்கம்பட்டி, துறையூர் தாலுகா, திருச்சி மாவட்டம். பெறுநர் காவல்துறை ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம், திருச்சி மாவட்டம். ஐயா, நான் திருச்சி மாவட்டம், துறையூர் தாலுகா, பொன்னுசங்கம்பட்டி, அம்பலகாரத்தெருவில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் M.A., M.B.A., படித்துள்ளேன். நான் சென்னையிலுள்ள ஆட்டோ மொபைல் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். நான் திருச்சி மாவட்டம், துறையூர் தாலுகா, பொன்னுசங்கம்பட்டி கிராமத்தில் சர்வே எண்.781/2ல் கட்டுப்பட்ட 31 சென்ட் அளவுள்ள விவசாய புன்செய் நிலத்தை திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், பொன்னுசங்கம்பட்டியைச் சேர்ந்த திரு.முருகேசன், திரு.லட்சுமிராசு ஆகியோரிடமிருந்து எனது பெயருக்கு வாங்கி கடந்த 26.05.2025ந்தேதியன்று துறையூர் ரிஜிஸ்டர் ஆபீசில் பத்திர எண்.4301/2025ன்படி பத்திரப்பதிவு செய்து கொண்டேன். அதேபோல் எனது சகோதரர் திரு.பெரியசாமியும் மேற்படி சர்வே எண்ணிற்கு கட்டுப்பட்ட 31 சென்ட் நிலத்தை தனது பெயருக்கு வாங்கி கடந்த 26.05.2025ந்தேதியன்று துறையூர் ரிஜிஸ்டர் ஆபீசில் பத்திர எண்.4302/2025ன்படி பத்திரப்பதிவு செய்து கொண்டார். மேற்படி பத்திர பதிவின்போதே பத்திர பதிவு கட்டணம் மற்றும் இதர கட்டணங்களுடன் உட்பிரிவு செய்வதற்கான கட்டணமான ரூ.400/-யும் செலுத்தினேன். பின்னர் 30.06.2025ந்தேதி எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டு கிடைக்கப்பெற்றது. ஆனால் என்னுடைய பட்டா எண்ணிற்குரிய (சர்வே எண்.781/2A) புன்செய் நிலத்தின் வரைபடத்தை(FMB) இணைய தளத்தில் பார்த்தபோது பதிவேற்றம் செய்யப்படாமல் இருப்பது தெரியவந்தது. எனது நிலத்திற்கான வரைபடம்

தொடர்பாக நேற்று 10.7.2025ந்தேதி காலை சுமார் 11¼ மணிக்கு துறையூர் தாலுகா ஆபீசுக்கு போய் விசாரித்து, பொன்னுசங்கம்பட்டி கிராமத்திற்குரிய சர்வேயர் திரு.ராஜா அவர்களை நேரில் சந்தித்து எனது நிலத்திற்குண்டான நில வரைபடம் குறித்து விபரம் கேட்டேன். உங்களுக்குத்தான் நான் ஏற்கனவே நிலத்தை அளந்து கொடுத்திட்டேன். ஆனா அதுக்கு நீங்க எனக்கு எதுவும் செய்யல, இப்ப FMB பத்தி கேட்க்கரீங்க, அதற்கு நான் என்ன சார் செய்யனும், தனியா பீஸ் எதுவும் கட்டனுமா சார் என்று கேட்டேன். அதற்கு அவர் ஒன்னும் தெரியாதமாதிரி கேட்பீங்க, நான் ஏற்கனவே உங்க நிலத்தை அளந்தற்கும், FMB கிடைக்க ஏற்பாடு செய்வதற்கும், எனக்கு தனியா ஏழாயிரம் கொடுத்தீங்கன்னா உங்க வேலைய சிரமம் இல்லாம, சீக்கிரம் முடிச்சி கொடுத்திடுறேன் என்று சொன்னார். அதற்கு நான், சார் நானே தனியார் கம்பெனியில வேலை பார்க்கிறேன், பணம் இல்லாம முடிச்சி கொடுங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர், தனியார் கம்பெனியில வேலை பார்க்கிறதா சொல்லீறிங்க இரண்டாயிரம் கொறச்சி 5 ஆயிரம் கொடுத்திடுங்க என்று வற்புறுத்தினார், பணம் கொடுக்கலேன்னா உங்களுக்கு வேல ஆகாது, நாளைக்கே கொண்டாந்து கொடுத்திடுங்க, சீக்கிரமே உங்க வேலைய முடிச்சி கொடுத்திடுறேன் என்று கறாராக சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, இருந்தாலும், அப்போதைக்கு அவரிடம், சரிங்க சார் பணம் ரெடிபண்ணிட்டு நாளைக்கு வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். ஏற்கனவே எனது நிலத்தை அளந்தற்கும், FMB கிடைக்க ஏற்பாடு செய்வதற்கும் ரூ.5,000/– லஞ்சம் கேட்ட திருச்சி மாவட்டம், துறையூர் தாலுக்கா, பொன்னுசங்கம்பட்டி கிராமத்திற்குரிய சர்வேயர் திரு.ராஜா மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (P.முருகேசன்) 11.07.2025 Submitted to the Court of Hon'ble Principal District and Sessions Judge, Trichy District. Received this report at 07.00 hrs., on 11.07.2025 and obtained permission from the DVAC, made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.8/2025 u/s 7 of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 08.45 hrs., on 11.07.2025. Sd.xxx (G.SAKTHIVEL) 11.07.2025 Inspector of Police, V&AC, Trichy.

11.07.2025
(G. SAKTHIVEL)
INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI - CORRUPTION
TRICHYRAPPALLY